[2004 பிப்ரவரி 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 31, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

31—

கோயில் திருப்பணி

***27186—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், வல்லக்கோட்டை முருகன் திருக்கோயிலுக்கு புதிய இராஜகோபுரம் அமைக்கும் மற்றும் திருக்கோயில் திருக்குளம் செப்பனிடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், வல்லக்கோட்டை அருள்மிகு முருகன் திருக்கோயிலில், தற்போது புதிய கொடிமரம் நிறுவவும் மற்றும் முன் மண்டபம் அமைக்கும் திருப்பணிகள் நடைபெற்று வருவதாலும், இத்திருப்பணிகள் முடிய சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகும் என்பதாலும், இத்திருப்பணிகள், முடிந்தவுடன், இத்திருக்கோயிலில் சுமார் ரூ.50,00,000 மதிப்பீட்டில் புதிய 5 நிலை இராஜகோபுரம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை, திருமதி டி. யசோதா.

2004 பிப்ரவரி 10]

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வல்லக்கோட்டை முருகன் கோயிலுக்கு திருக்குளம் செப்பனிடும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று கேட்கப்பட்டு இருக்கின்றது. திருக்குளங்கள், கோயில்களுக்குள்ளே இருக்கின்ற எல்லா திருக்குளங்களையும் செப்பனிட்டாலும்கூட, இன்றைக்குத் தண்ணீர் இல்லாத சூழ்நிலை குளங்களிலே இருக்கின்றது. குறிப்பாக மாங்காடு காமாட்சியம்மன் திருக்கோயிலுக்குக்கூட திருப்பணி நடந்து கொண்டிருக்கிறது. குளம் அங்கே வெட்டப்பட்டு வருகின்றது. ஆனால், தண்ணீர் கிடையாது. செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து தண்ணீர் வரக்கூடிய அந்த வாத்துக் கால்வாய் இன்றைக்கு பிளாட் போட்டு விற்கப்பட்டுவிட்டது. அதேமாதிரி குளம் நிரம்பினால் தண்ணீர் போகக்கூடிய அந்த வழியும்கூட இன்றைக்கு பிளாட்டுகளாக மாறிவிட்ட காரணத்தாலே குளத்திற்கு வரக்கூடிய தண்ணீருக்கு வழிவகை செய்யக்கூடிய முயற்சி அரசிடம் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வல்லக்கோட்டை அருள்மிகு முருகன் திருக்கோயில் முன்பாக உள்ள குளம் திருக்கோயிலுக்குச் சொந்தமானது அல்ல. இருப்பினும் வருவாய்த் துறையை தொடர்புகொண்டு திருக்குளத்தை திருக்கோயிலின் அதிகார வரம்பிற்குக் கொண்டுவருவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது. அதன்பின்பு திருக்குளத்தை நன்கொடையாளர்கள் மூலம் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது தூர் வாரப்பட்டிருக்கிற குளங்களுக்கு தண்ணீர் வருவதற்கு வழி இல்லை என்று சொன்னார்கள். பல்வேறு குளங்களில் எந்தெந்த வழியாக தண்ணீர் கொண்டு செல்லப்படும் என்பதை ஆய்வு செய்து அந்தந்த குளங்களுக்கு தண்ணீர் கொண்டு வருவதற்கு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2004 பிப்ரவரி 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 32, திரு வெ. ஏழுமலை, மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர்.

32—

ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி

***6362—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியம், மொடையூர் காலனியில், புதிய ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியத்திலுள்ள மொடையூர் காலனி என்பது ineligible habitation. அதாவது பள்ளி தொடங்க தகுதியில்லாத குடியிருப்பு என்பதால் அங்கே தொடக்கப் பள்ளி தொடங்க வாய்ப்பு இல்லை. இருந்தாலும் 100 விழுக்காடு கல்வியறிவு பெற்ற மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க வேண்டுமென்ற முனைப்போடு செயல்பட்டு வருகிற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இப்படிப்பட்ட பள்ளி தொடங்க தகுதியில்லாத குடியிருப்புப் பகுதிகளிலும் Education Guarantee Scheme, அதாவது கல்வி உறுதியளிப்புத் திட்டம் என்ற அந்தத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் கிட்டத்தட்ட 349 மையங்களைத் தொடங்குவதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டு உத்தரவிட்டிருக்கிறார்கள். இதுவரை 240 மையங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு